---

**தமன பிரதேச சபை**

**அம்பாறை மாவட்டம்**

---

## 1. நிதிசார் கூற்றுக்கள்

---

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 நவெம்பர் 17 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மே 18 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 மே 13 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

---

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, தமன பிரதேச சபை 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தமன பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருவாயாகிய ரூபா 133,000 வருவாயாகக் கணக்கிலிடப்படவில்லை. மேலும், 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான முத்திரைக் கட்டண வருவாய் நிலுவை ரூபா 412,600 ஆகவிருந்தபோதும் அது ரூபா 1,090,075 ஆகக் கணக்கிலிடப்பட்டிருந்தமையால் முத்திரைக் கட்டண நிலுவை ரூபா 677,475 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 12,465,819 க்கான கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதி, மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 169,302 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 2,132,450 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தீர்வையும் வரியும் | 735,000 | 666,856 | 1,385,801 |
| (ii) | வாடகை | 1,525,000 | 1,235,972 | 189,555 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,025,000 | 105,254 | 6,744 |
| (iv) | பிற வருவாய் | 160,000 | 492,968 | 1,415 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்தும் 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட வேண்டிய தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 302,400 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 1,090,075 |

### 2.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

**பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.**

(அ) 2011 டிசெம்பர் மாதமளவில் உள்ளுராட்சி சேவையின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 103,283 கொடுப்பனவு செய்யப்படுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) உள்ளூர்க் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்ற ரூபா 1,950,000 கடன் தொகையை உடன்படிக்கைப் பிரகாரம் கொடுப்பனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) தற்போது சபை பயன்படுத்தும் 6 வாகனங்களையும் சபை சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) அபிவிருத்தி நிதியத்திலிருந்து அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாது பொதுச் செலவினத்திற்கு ரூபா 485,185 பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் முகாமைத்துவம்